காலைக் கதிர் 9-10-06



பாம்பு போல வளைந்து செல்லும் ஈரோடு கோணவாய்க்கால்.

# பாம்பு வழிகாட்டிய கோண வாய்க்கால்?

இப்படியும் இருந்தது ஈரோடு

ஈரோட்டில் 'கோணவாய்க்கால்' என்ற அடைமொழி இன்றளவும் பேசப்பட்டு வருகிறது.

ஈரோட்டின் வடக்கிலும், தெற்கிலும் ஓடும் பழங்கால கால்வாய் காளிங்கராயன் கால்வாய். கி.பி. 13ம் நூற்றாண்டில் வெள்ளோடு கனகபுரத்தில் வாழ்ந்த காளிங்கராயன், தன் குடும்ப சொத்தை கொண்டும், வீரபாண்டியன் துணையுடன் 'காளிங்கராயன் விநியோகம்' என்ற வரிப் பணத்தை கொண்டு 56.5 மைல் நீளமுடைய முப்போகம் விளையும் இக்கால்வாயை வெட்டி வைத்து நாட்டுடமையாக்கினார்.

பவானிக்கும், காளிங்கராயன் கழிவு நீர் கலக்கும் நொய்யலுக்கும் இடையே சில இடங்களில் நிலம் தாழ்வாக உள்ளது. நேராக வாய்க்கால் வெட்டினால் தண்ணீர் வேகமாக சென்று நொய்யலில் கலந்து விடும். வயலுக்கு பாயாது.

அதனால் மேடு கண்ட இடமெல்லாம் கால்வாயை கொண்டு சென்றதால் பல இடங்களில் பல வளைவு ஏற்பட்டது. வளைவை பார்த்த மக்கள், 'வாய்க்கால் வெட்ட பாம்பு வழி காட்டியது. அதனால் பாம்பு வளைந்து செல்வதை போல வாய்க்காலும் வளைந்து கோணல் கோணலாக செல்கிறது' என்று கூறினர். இந்த இடங்களில் சென்ற காளிங்கராயன் கால்வாயை 'கோணவாய்க்கால்' என்று அழைத்தனர், இன்றும் 'கோணவாய்க்கால்' பகுதி என்று தனியாக உள்ளது. அதன் அருகே ஆயிரக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர்.